கான தொழில் நுட்ப அனுமதி ஏன் 8 மாதங்களாக வழங்கப்படவில்லை? தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்ட மேலாண்மைக் குழு ஏன் 8 மாதங்களாக நிதியை விடுவிக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, கடன் பெறுவதில் சற்று காலதாமதமான காரணத்தால், மதிப்பீடுகளும் கொஞ்சம் காலதாமதம் ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு துரித நடவடிக்கை எடுக்கச் சொல்லி, இங்கிருந்து அவர்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. எது எப்படி இருந்தாலும் குறிப்பிட்ட 1992 மார்ச் இறுதிக்குள் நிச்சயமாக அந்தப் பணிகள் முடிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் ஸ்டாண்டை விட்டு வெளியேறும் புதிய சாலை அமைக்க தனியாக உலக நாடுகள் வங்கி 230 இலட்சம் சாங்ஷன் செய்துள்ளது. இந்தச் சாலை ஒரு வழிச் சாலைதான். எனவே தனி நபர்களுக்குப் பாதகம் ஏற்படாமலும், நிலத்தை ஆர்ஜிதம் செய்வதன் மூலமாக அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாத வகையிலேயும், அகலமாக அமைக்கும் நோக்கத்தை அரசு மாற்றி அமைக்குமா? அந்தச் சாலை அமைக்கும் பணி எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மதிப்பீடு கிடைத்தவுடன் துவங்கும்.

(ஆ) கண்டமங்கலம் ஒன்றியப் பகுதியில் பம்பு செட்டுகளுக்குக் கூடுதல் மின் திறன் அளிக்காதது குறித்து.

திரு. ச. அழகுவேலு : பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் சுமார் 30 கிராமங்களில் 150க்கும் மேற்பட்ட மின்சார . . . . . .

10-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிப்பிலே இருப்பதை படிக்க வேண்டும். நானே படிக்கட்டுமா?

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவன ஈர்ப்பை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''கண்டமங்கலம் ஒன்றியத்தில் 150-க்கும் மேற்பட்ட விவசாயப் பம்பு செட்டுகளுக்குக் கூடுதல் மின்திறன் கொடுக்காதது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்துக்கு திரு. ச. அழகுவேலு கொண்டு வருகிறார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

கண்டமங்கலம் ஒன்றியத்தைச் சேர்ந்த, ஒப்புதல் படிவம் (அக்ரிமென்ட்) பெறப்பட்ட சுமார் 150 விவசாய விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் மின் சுமை வழங்க அதிக திறனுள்ள மின் மாற்றிகள் மற்றும் கூடுதல் திறனுள்ள மின்கம்பிகள் அமைக்க வேண்டியுள்ளது.

2. இந்தப் பணிகள் இந்த மாதம் (ஏப்ரல் 1990) துவங்கப்பட்டு, மாதம் 40 இணைப்புகள் வீதம், தளவாடங்கள் கிடைப்பதற்கேற்ப, திட்டமிடப்பட்டு அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் சுமார் நான்கு மாதங்களில் கூடுதல் இணைப்புகள் வழங்கப்படும்.

3. தென்னாற்காடு மாவட்டத்தில் 1989-90 ஆம் ஆண்டில் 1,358 விவசாய இணைப்புதாரர்களுக்கு கூடுதல் மின் சுமை வழங்கப்பட்டது.

4. கூடுதல் மின்சுமை வழங்கவேண்டுமானால் குறிப்பிட்ட மின்பாதைக்கான கம்பிகள் போதிய திறனுள்ளவையாக இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மின் மாற்றியில் தேவையான உபரி பளு இருக்க வேண்டும். ஆகவே கூடுதல் மின் சுமை வழங்க தொழில்நுட்ப சாத்தியக் கூறு (Technical Feasibili y) இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்களுக்கு திட்டமேம்பாட்டு அடிப்படையில், மின் மாற்றி மற்றும் மின் கம்பிகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து கூடுதல் மின் சுமை வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. இதன் பின் தளவாடங்கள் கிடைப்பதைப் பொறுத்து பணிகள் துவக்கப்பட்டு விண்ணப்பங்கள் பதிவு வரிசைப்படி இணைப்புகள் வழங்கப்படுகின்றன.

கூடுதல் மின்சுமை வழங்குவதற்கான மேம்பாட்டு பணிகளுக்கு தனியாக நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. இப்பணிகள் மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து தளவாடங்கள் கிடைப்பதற்கேற்ப துவங்கப்படுகின்றன. ஆகவே இப்பணிகளில் ஏற்படும் காலதாமதம் தவிர்க்க இயலாததாகும்.

1990 மே 8]

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 4 மாதங்களுக்குள் விரைவாக கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆனால், அதற்கு இடையிலே அங்கே மின் திருட்டு தடுப்புக் குழுவினர் என்ற ஒரு அமைப்பு அங்கு இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கு மின்சாரம் திருடுகிறார்கள் என்ற முறையிலே அடிக்கடி தொல்லை கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். நிலத்தடி நீர் ஆழமாகப் போய் விட்ட இந்தக் காலக்கட்டத்தில் விவசாயிகளுக்கு அந்தக் குழுவினர் ஏராளமாகத் தொந்தரவு கொடுக்கின்றார்கள். ஆகவே, வாலண்டரி டிஸ்குளோஷர் என்ற அமைப்பின் கீழ் தயவுசெய்து இதைவிட அதிகமாகக் கொடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கூடுதல் மின்சாரம் வழங்கவேண்டும் என்பது தான் இதிலே, கொடுக்கப்பட்டு இருக்கிற முக்கிய நோக்கம். மின்சாரத் திருட்டைக் கண்டுபிடிப்பதற்கு என்று தனியாக ஸ்குவாட் இருக்கிறது. அதை அது போய் கண்டு பிடிக்கிறது. அதற்கும் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. திருடர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அந்த ஸ்குவாட் கண்டுபிடிக்கும். இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில் 150 விவசாய விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் மின் சாரம் வழங்க வேண்டுமானால் அதிகத் திறன் உள்ள மின் மாற்றிகளும், கூடுதல் திறன் உள்ள மின் கம்பிகளும் தேவை. அதற்காக சிறிது காலதாமதம் ஏற்பட்டது. இந்த மாதத்தில் இருந்து மாதம் ஒன்றுக்கு 40 இணைப்புகள் வீதம் அந்த 150 பேருக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மனுக்கள் குழு

திரு. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1989-90ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழு.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1989-90 ஆம் ஆண்டுக்கான பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.